ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2162/57 - 2020 පෙබරවාරි 14 වැනි සිකුරාදා - 2020.02.14
**2162/57 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2020 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/5/2019/CEB/110.
பிர. செ. குறிப்பு இல. : DSO/HOM/LAC/124.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல 1200/6, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, பெப்புருவரி 12

### அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர் ஹோமாகம.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், 590/A, மாகம்மன மேற்கு கிராம அலுவலர் பிரிவில், மாகம்மன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.08.26 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட CO/HMG/2019/388 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் கீழே குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு A அம்பகஹலந்த, எட்டம்பகஹலந்த மற்றும் மொரகஹலந்த – விஸ்தீரணம்: சுமார் 0.0368 ஹெக்டயார்**
வடக்கு : சீமெந்து வடிகால் மற்றும் பி.ஏ.எஸ். குமாரதிலக உரிமைகோரும் அம்பகஹலந்த, எட்டம்பகஹலந்த மற்றும் மொரகஹலந்த; கிழக்கு : வீதி (வீ.அ.அ.) ; தெற்கு : துண்டு B; மேற்கு : துண்டு B மற்றும் சீமெந்து வடிகால்.

**02. துண்டு B அம்பகஹலந்த, எட்டம்பகஹலந்த மற்றும் மொரகஹலந்த – விஸ்தீரணம்: சுமார் 0.0327 ஹெக்டயார்**
வடக்கு : சீமெந்து வடிகால், துண்டு A மற்றும் வீதி (வீ.அ.அ.); கிழக்கு : துண்டு A மற்றும் வீதி (வீ.அ.அ.); தெற்கு : வீதி (வீ.அ.அ.) மற்றும் கொதலாவல மாவத்தை ; மேற்கு : கொதலாவல மாவத்தை மற்றும் சீமெந்து வடிகால்.

*02-619*

1A – G32032 – 21 (2020/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.